விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 180 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 03 செவ்வாய்க்கிழமை (17.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3213)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567

## கொழும்பு மாநகர சபை தேசிய மக்கள் சக்தி வசமானது

### புதிய மேயராக விராய் கெலி பல்தஸார் தெரிவு



(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியதோடு அதன் புதிய மேயராக தேசிய மக்கள் சக்தி சார்பில் விராய் கெலி பல்தஸார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாநகரசபை மேயரைத் தெரிவு செய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பை 15ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருளைப் பெற்றுக் கொள்ள யாழில் மீண்டும் வரிசை



15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச வர்த்தகப் போரால் இலங்கையின் ஏற்றுமதி பெருமளவு பாதிப்பு

### ஐ.நா மனித உரிமை ஆணையாளர்



*(ஜெனிவா)*

சர்வதேச வர்த்தகப் போர் காரணமாக இலங்கையின் ஏற்றுமதி தொழிற்துறை மிகப்பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளது என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க் எச்சரித்துள்ளார். *(16ஆம் பக்கம் பார்க்க)*

## போதியளவு எரிபொருள் கையிருப்பு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்

### அரச அதிபர் ம.பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எரிபொருள்தாராளமாகக்காணப்படுகிறது. செயற்கைத் தட் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாநகர முதல்வர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



15ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி வட்டக்கச்சியில்

## வாய்க்காலிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி பத்து வீட்டுத் திட்ட குடியிருப்புக்கு அண்மையில் உள்ள நீர்ப்பாசன வாய்க்காலினுள் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் குமாரதாஸ் (வயது -54) 15ஆம் பக்கம் பார்க்க

## ஈரான் உளவுத்துறை தலைவர் கொலை

### மத்திய கிழக்கில் தொடரும் பதற்றம்



(ஜெருசலேம்)

ஈரானின் உளவுத்துறைத் தலைவர் மற்றும் இரண்டு தளபதிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து 16ஆம் பக்கம் பார்க்க

## ஆட்டோ மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### நெடுந்தீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த பர்ணாந்து சகாயதேவதாஸ் (குமார்- 15ஆம் பக்கம் பார்க்க

### 19 வயது இளைஞன்

## குருநகரில் கஞ்சாவுடன் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் நீண்டகாலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 19 வயதுடைய இளைஞர் ஒருவர் 16ஆம் பக்கம் பார்க்க

### தீவகத்தின் அனைத்துச் சபைகளிலும்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்தே ஆட்சியமைக்கும்

### கூட்டத்தில் உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவிப்பு



15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைதீவு

# திடுதிடுக்கை வைரவருக்கு நாளை சங்காபிஷேகம்

மண்டைதீவு திடுதிடுக்கை ஞான வைரவர் ஆலய சகஷ்ட சங்காபிஷேகமானது நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வைரவப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 1008 சங்குகளால் அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து விசேட பூஜை வழிபாடுகளுடன் அன்னதானமும் இடம்பெறும். (ந)

வேலைவாய்ப்புக்காக

# இஸ்ரேலுக்கு இலங்கையர்களை அனுப்புவது இடைநிறுத்தம்

இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புக்காக இலங்கையர்களை அனுப்புவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் நிலவும் போர் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார். (ம-4,7)

# தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவை செயலிழக்கச் செய்ய அரசு முயற்சி

தயாசிறி ஜயசேகர



(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்திலிருந்து 2004 - 2008 காலப் பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியினரும் (ஜே.வி.பி.) நிதி உதவிகளைப் பெற்றுள்ளனர். இது தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக நாம் தகவல்களைக் கோரிய போதிலும், அந்தத் தகவல்கள் வழங்கப்படவில்லை. இந்த அரசாங்கம் தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவையும் செயலிழக்கச் செய்ய முயற்சிக்கின்றதெனப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை (16) தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்குச் சென்ற தன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2008ஆம் ஆண்டிலிருந்து 2024 வரை ஜனாதிபதி நிதியத்திலிருந்து உதவி பெற்றவர்களின் பெயர் பட்டியலை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

2004 - 2008 வரை ஜனாதிபதி நிதியத்திலிருந்து உதவி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்தக் காலப்பகுதி ஜே.வி.பி அப்போதைய அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியாகும். எதற்காக இந்த 4 வருடங்களை தவிர்த்து பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது? அவ்வாறெனில் அந்த 4 ஆண்டுகளில் ஏதேனும் மோசடி இடம்பெற்றுள்ளதா? இது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக தகவல்களைக் கோரியிருந்தேன். எனினும் 5 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அந்தத் தகவல்கள் வழங்கப்படவில்லை.

குறித்த காலப்பகுதியில் சில ஜே.வி.பியினரும் இந்த ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதியுதவி பெற்றுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. 6 மாதங்களின் பின்னர் நாம் கோரிய தகவல்களை வழங்க முடியாது என எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் கோரிய தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றேன் என்றார். (ம-4,7)

லொத்தர் சீட்டிழுப்பில்

# குருநாகல் வாசிக்கு ரூ.47.4 கோடி அதிர்ஷ்டம்

(குருநாகல்)

தேசிய லொத்தர் சபையின் மெகா பவர் லொட்டரி சீட்டின் நேற்றைய சீட்டிழுப்பில் குருநாகல் மாவட்டத்தின் கொக்கரல்ல பிரதேசத்தை சேர்ந்த வெற்றியாளர் ஒருவருக்கு மெகா சூப்பர் பரிசு தொகையாக 47.4 கோடி ரூபாய் கிடைக்கப் பெற்றுள்ளது. (ம-4,7)

# புத்தூரில் விபரீத முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு

புத்தூரில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த வெற்றிவேல் மயூரன் (வயது -29) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் ஏற்கனவே தற்கொலைக்கு முயன்ற நிலையில் ஞாயிற்றுக்கிழமை (15) இரவு வீட்டில் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-4,7,60)


# மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 02 - 1962



இறப்பு 16 - 06 - 2025

## திருமதி வதனி செல்வகுமார்

விக்னேஸ்வராக்கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வதனி செல்வகுமார் நேற்று (16.06.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வகுமாரின் அன்பு மனைவியும் கபில்நாத்தின் அன்புத்தாயாரும், நிவேதிகாவின் அன்பு மாமியாரும் சாந்தினி, ஞானதாஸ் (இலண்டன்), யோகதாஸ் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சிவதாஸ், ரமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற திருஞானசுந்தரம் மற்றும் வசந்தி(இலண்டன்), புவனவேணி ( ஜேர்மனி), வீரவாகு (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஹரிஸ், அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2025) செவ்வாய்க் கிழமை மதியம் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி மேற்கு, கரவெட்டி.


தகவல்: குடும்பத்தினர் 077 619 7660 070 679 7901

(C-3210)

# மரண அறிவித்தல்

## மூத்ததம்பி ஆனந்தகிருஷ்ணன்

(முன்னாள் பொதுமுகாமையாளர் வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம் - அச்சுவேலி, சமாதான நீதவான்)



பிறப்பு 04.04.1935 இறப்பு 15.06.2025

யாழ்.ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் கடந்த (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - மூத்தபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுந்தரேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும் ஆனந்தகௌரி (சுவிஸ்), கௌசலா (தேனா, ஆசிரியர் - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), சுதர்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற தணிகைக்குமரன் (லண்டன்), கமலக்குமரன் (ஆசிரியர் - கிளி/பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னையா, அன்னம்மா மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின்அன்புச் சகோதரனும் இராசலட்சுமி, காலஞ்சென்றவர்களான நடராசா, பொன்னுத்துரை, பரமேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் பாலசரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திவாகரன் (சுவிஸ்), காந்தீபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்), சிவலிங்கம் (ஜேர்மனி), சிந்து (லண்டன்), லக்ஸிகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மநகர சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆகாஷ், அஸ்மிதா, ஆஷிகா, ஆர்த்திகா, அக்ஷிகா, நிதுன், நிகிஷா, அபினாஸ், அப்சரன், ஆருக்ஷன் ஆகியோரின் பாசமிகுப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2025) புதன்கிழமை மு.ப 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(C-3214)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிமோசடியுடன் தொடர்புடைய 88 நபர்களின் சொத்துக்கள் முடக்கம்

**(கொழும்பு) திட்டமிட்ட குற்றம் மற்றும் நிதி மோசடியுடன் தொடர்புடைய 88 நபர்களின் சொத்துக்களை இலங்கை பொலிஸார் முடக்கியுள்ளனர்.**



இவர்களில் 26 பேர் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக சந்தேகிக்கப்படுபவர்கள்.

ஏனையவர்கள் பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்பவர்கள்.

முடக்கப்பட்ட சொத்துக்களில் நிலம், வீடுகள், வங்கிக் கணக்குகள், வாகனங்கள், நகைகள், வணிக வளாகங்கள் மற்றும் நெல் வயல்கள் ஆகியவை அடங்கும்.

சட்டவிரோத சொத்து குவிப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட பல அண்மைய சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2024 டிசம்பர் மற்றும் 2025 ஜனவரிக்கு இடையில், போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புடைய 15.25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உட்பட, சுமார் 22.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான குற்றச் சொத்துக்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

மே மாதத்தில், பயங்கரவாத அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முடக்குவதாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டது.

பாதுகாப்புச் செயலாளர், ஓய்வுபெற்ற ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துயகோந்தா இந்த வர்த்தமானியை வெளியிட்டிருந்தார். (நி)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவருள்மிகு மூத்தவிநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் 30 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும், எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 3 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையவுள்ளதென ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3)

## வாகன இலக்கத் தகடுகள் வழங்குவதில் தாமதம்

(கொழும்பு)

புதிய வாகன உரிமையாளர்களுக்கு வாகன இலக்கத் தகடுகள் வழங்குவதில் இரண்டு மாத கால தாமதம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிய சப்ளையரிடமிருந்து இலக்கத் தகடுகளுக்கான கொள்முதல் கோரிக்கையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் சமர்ப்பித்ததால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்குள் இந்த செயல்முறை நிறைவடையும் என்றும், அதன் பின்னர் இலக்கத் தகடுகள் வழங்கல் மீண்டும் தொடங்கும் என்றும் DMT ஆணையர் ஜெனரல் கமல் அமரசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

அதுவரை, புதிய வாகன உரிமையாளர்களின் பதிவு விபரங்களை உறுதிப்படுத்தும் அச்சிடப்பட்ட காகித எண் தகடுகள் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்களத்தினர் கடிதத்தை DMT வழங்கும் என்றும், இந்த நடவடிக்கை குறித்து பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் கூறினார். (நி)

## வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை தேசிய மக்கள் சக்தி வசம்

(வவுனியா)

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சுதர்சன சாமர வீரக்கோன் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் பிரதி தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் குணபால சரத்மது ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி தலைமையில், பிரதேச சபை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

தவிசாளர் தெரிவிற்கு இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தி சார்பில் சுதர்சன சாமர வீரக்கோன், மற்றும் சுயேட்சைகுழு சார்பில் கசுன் சுமதிபால ஆகியவர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. வாக்களிப்பு முடிவுகளின் படி தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினருக்கு 12 வாக்குகள் கிடைக்கப்பெற்றது. சுயேட்சை உறுப்பினருக்கு 5 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுதர்சன சாமர வீரக்கோன் தவிசாளராக தெரிவு செய்யப் பட்டார். (நி-250)

## ஈரான் தாக்குதலில் சிக்கி இலங்கையர்கள் காயம்

(டெஹ்ரான்)

இஸ்ரேலின் பினீ பிராக் பகுதியில் ஈரானிய ஏவுகணைத் தாக்குதலில் சிக்கி இலங்கை இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. கட்டுமானத் தளத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த இலங்கை இளைஞரே காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே இவ்வாறு இரண்டு இலங்கைப் பெண்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இஸ்ரேலின் வலிந்த தாக்குதலையடுத்து ஈரான் நடத்திவரும் தாக்குதல்களால் இஸ்ரேலின் பல பகுதிகளுக்கு கடும்சேதம்ஏற்பட்டுள்ளது. (நி)

## ஜனாதிபதி அநுரவைச் சந்தித்தார் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரி



(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வ தேச நாணய நிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கீதா கோபிநாத், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இடம் பெற்றுள்ளது.


இது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கீதா கோபிநாத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

இன்றைய தினம் கொழும்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் ஆரோக்கியமான சந்திப்பு இடம் பெற்றது. பொருளாதார சீர்திருத்தங்களில் இலங்கையின் வலுவான செயல்திறன் மற்றும் உத்வேகத்தைப் பேணுவதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி அநுரவுடன் கலந்துரையாடினேன்.

இந்தச் சீர்திருத்தங்களுக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு அனைத்து இலங்கையர்களுக்கும் நீடித்த நிலைத்தன்மை மற்றும் செழிப்புக்கு இன்றியமையாதது என குறிப்பிட்டுள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

மலர்வு-05.03.1942 உதிர்வு-04.06.2025



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.பு.குகானந்தன் அவர்களின் அன்புத் தந்தை
அமரர். சுப்பிரமணியம் புலேந்திரலிங்கம்
(ஓய்வு நிலை கிளை முகாமையாளர், பலநோக்கு கூட்டுறவு சங்கம்)
அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(சி-3208)

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## டெஸ்ட் தரவரிசையில் முன்னேறியது தென்னாபிரிக்கா அணி



சர்வதேச கிரிக்கெட் பேரவையின் டெஸ்ட் அணிக்கான தரவரிசையில் தென்னாபிரிக்கா அணி 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டிய தென்னாபிரிக்கா அணி, 114 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலிருந்து 2 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

அதேநேரம், அவுஸ்திரேலியா அணி 123 புள்ளிகளுடன் முதல் இடத்திலுள்ளதுடன், இங்கிலாந்து அணி 113 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளிப் பட்டியலுக்கு அமைய 105 புள்ளிகளுடன் இந்திய அணி 4 ஆவது இடத்திலும், இலங்கை அணி 87 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்திலும், 78 புள்ளிகளுடன் பாகிஸ்தான் 7 ஆவது இடத்திலும் உள்ளதுடன் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பங்களாதேஷ் அணிகள் முறையே 8 ஆவது மற்றும் 9 ஆவது இடங்களில் தரப்படுத்தப்பட்டுள்ளன. (நி-3)

## இலங்கை-பங்களாதேஷ் டெஸ்ட் தொடர்
# இலங்கை குழாம் அறிவிப்பு

பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டிக்கான 18 பேர்கொண்ட இலங்கை குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று செவ்வாய்க் கிழமை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தனன்ஜய டி சில்வாவின் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த டெஸ்ட் குழாத்தில் லஹிரு உதார, சொனால் தினுஷ, தரிந்து ரத்நாயக்க, பவன் ரத்நாயக்க, பசிந்து சூரியபண்டார மற்றும் இசித விஜேசுந்தர ஆகிய 6 டெஸ்ட் அறிமுக மற்ற வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 2019ஆம் ஆண்டு இறுதியாக டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடிய சுழல் பந்துவீச்சாளர் அகில தனன்ஜய மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அதுமாத்திரமின்றி தொடர்ச்சியாக டெஸ்ட் குழாத்தில் இடம்பிடித்துவந்த வேகப் பந்துவீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோவுக்கு பதிலாக கசுன் ராஜித மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டியுடன் ஓய்வுபெறவுள்ள அஞ்செலோ மெதிவ்ஸுடன், தினேஷ் சந்திமால், பெதும் நிஸ்ஸங்க, கமிந்து மெண்டிஸ், குசல் மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய மற்றும் அசித பெர்னாண்டோ ஆகிய முன்னணி வீரர்களும் அணியில் இடம்பெற்றுள்ளனர். (நி-3)



# நடைமுறைக்கு வரும் புதிய விதிமுறைகள் சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவிப்பு

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ICC) ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் 2 முக்கிய விதிமுறைகளை மாற்றி அமைத்துள்ளது.

ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தற்போது 2 புதிய பந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அதாவது, ஒவ்வொரு முனையிலிருந்தும் பந்து வீசும் போது, வெவ்வேறு பந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற விதியே தற்போது நடைமுறையில் உள்ளது.

இதன்படி, ஒரு பந்து ஒரு இன்னிங்ஸில் 25 ஓவர்கள் வீசுவதற்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த விதியில் தற்போது மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

இதற்கமைய இனிவரும் காலங்களில் இன்னிங்ஸின் முதல் 34 ஓவர்கள் வரை மாத்திரமே 2 வெவ்வேறு பந்துகள் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 16 ஓவர்களுக்கு இரண்டு பந்துகளில், ஒரே பந்து மாத்திரமே முழுமையாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் டெஸ்ட், ஒரு நாள் மற்றும் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் பயன்படுத்தப்படும் கொன்கஷன் சப்ஸ்டிட்யூட் என்ற மாற்று வீரர்கள்(Concussion Substitute) குறித்த விதிமுறைகளிலும் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி இனிவரும் காலங்களில் 5 கொன்கஷன் சப்ஸ்டிட்யூட் என்ற மாற்று வீரர்கள் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாக ஒரு விக்கெட் காப்பாளர், ஒரு துடுப்பாட்ட வீரர், ஒரு வேகப்பந்து வீச்சாளர், ஒரு சுழற்பந்து வீச்சாளர் மற்றும் ஒரு சகலதுறை ஆட்டக்காரர் என ஒவ்வொரு அணியும் மாற்று வீரர்களை அறிவிக்க வேண்டும்.

இந்த விதிமுறை ஜூன் 17 ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டிகளிலும், ஜூலை 2 ஆம் திகதி முதல் ஒரு நாள் போட்டிகளிலும், ஜூலை 10 ஆம் திகதி முதல் இருபதுக்கு 20 போட்டிகளிலும் நடைமுறைக்கு வரும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது. (நி-3)

# அல்டிமேட் டேபிள் டென்னிஸ் மும்பை அணி சம்பியன்

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டியின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் அகமதாபாத்தில் இடம்பெற்றது. இதன் இறுதிப் போட்டியில் மும்பை, ஜெய்ப்பூர் அணிகள் மோதியிருந்தன.

இதில் 8-4 என்ற கணக்கில் ஜெய்ப்பூரைத் தோற்கடித்து மும்பை அணி முதன் முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இதன் ஆண்கள் ஒற்றையர் முதல் போட்டியில் மும்பையின் லிலியன் பார்டெட் 2-1 என ஜெய்ப்பூரின் கனக் ஜாவை வீழ்த்தினார். பெண்கள் ஒற்றையர் முதல் போட்டியில் ஜெய்ப்பூரின் ஸ்ரீஜா அகுலா 1-2 என மும்பையின் பெர்னா டெட் சோக்சிடம் தோல்வி யடைந்தார்.

கலப்பு இரட்டையர் போட்டியில் மும்பையின் ஆகாஷ் பால், பெர்னாடெட் சோக்ஸ் ஜோடி 3-0 என ஜெய்ப்பூரின் ஜீத் சந்திரா, பிரிட் ஏர்லேண்ட் ஜோடியை வென்றது. ஆண்கள் ஒற்றையர் 2ஆவது போட்டியில் ஜீத் சந்திரா (ஜெய்ப்பூர்) 2-1 என அபினந்தை (மும்பை) வீழ்த்தினார்.

நான்கு போட்டிகளின் முடிவில் மும்பை அணி 8-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் முதன் முறையாக கோப்பை வென்றது. (நி-3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.139, Main Street Jaffna.
**யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்**
**(முன்பதிவு செய்து வரவும்)**

(4547)



**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (1236)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**


## வெவ்வேறு விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)


நாடு முழுவதும் நேற்று முன்தினம் பதிவான வீதி விபத்துக்களில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலை, வெலிகம மற்றும் மினுவங்கொடை ஆகிய பகுதிகளில் இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன. (நி-3)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 18.05.2025 அன்று சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

**அமரர். வேலுப்பிள்ளை கந்தசாமி**
ஓய்வுபெற்ற கூட்டுறவு முகாமையாளர்
சமூகப்பற்றாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 17.06.2025 இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத் தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ச்சியாக இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனைத்து வகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் , இறுதிக் கிரியை மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும்,இறுதிக் கிரியையில் அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகவல்-குடும்பத்தினர்**

பிள்ளைகள்- க.அருந்தவராசா,திருமதி.சுதாகர் விஜயகுமாரி,
பேரப்பிள்ளைகள்-ஜெ.செம்னா,அ.சோபனா(கனடா),அ.ஆனந்த்(ஹொலண்ட்),அ.சாதுர்ஜன்(ஹொலண்ட்),
கி.ஜெயானந்தன்-(மருந்துக் கலவை உத்தியோகத்தர்), க.அகிலன்(கனடா)
பூட்டப்பிள்ளைகள்- ஜெ.சஞ்ஜய்குமார் (A/L 2025 நெல்லியடி மத்திய கல்லூரி),ஜெ.சஜோனா,அ.ஆதர்ஷ்.

**துன்னாலை வடக்கு,**
**கரவெட்டி.**

(4550)


# இராசிபலன்

17.06.2025
ஆனி 03, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பிற்பகல் 12.41 மணிவரை

சதயம் முன்னிரவு 11.08 மணிவரை
சுபநேரம் 10.23 - 11.53 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23மணிவரை

சந்திராஷ்டமம்-
பூரம், ஆயில்யம்.

**வளவன்**

**மேஷம்**
எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், எதிர்பார்த்த தொகை வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்**
உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**துலாம்**
புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, எதிர்பார்ப்புகள் நிறை வேறும் வாய்ப்புண்டு, தாய்வழி ஆதரவு பெருகும்.

**மகரம்**
முன் கோபமும் அலைச்சலும் அதிகரிக்கும், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் கூடும் நாள்.

**ரிஷபம்**
அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**சிம்மம்**
கனவுப் பலிதமுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**கும்பம்**
புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை கூடும், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
மனித, தெய்வ வழிபாடு மகத்துவம் தரும், எதிலும் அவசரத்தைத் தவிர்ப்பது நல்லது, உங்களின் கடின வாழ்வை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், பகையொன்று நட்பாகலாம்.

**கன்னி**
குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிரிகள் உதிரியாகும் நாள், மருத்துவச் செலவுகள் குறையும், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும் கூட்டு முயற்சிகள்

**தனுசு**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்**
உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**காரியத்தில் உறுதியாய் இருப்பதே வெற்றியின் இரகசியம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவம் (2025) எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை இரவு திருமஞ்சத் திருவிழாவும், 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 9 ஆம் திகதி புதன் கிழமை காலை தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி வியாழக் கிழமை காலை கங்கா தரணி தீர்த்தக்கரையில் தீர்த் தோற்சவமும் அன்று இரவு கொடியிறக்கமும் இடம்பெற்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையவுள்ளதென ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (3)



# பிரதேச பண்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் நிதிப்பங்களிப்புடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் பிரதேச பண்பாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் GMJ திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய், பிரதேச செயலாளர் திருமதி. சுபாஜினி மதியழகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஜ், கௌரவ விருந்தினர்களாக எழுத்தாளர் நவாலியூர் நடேசன் மற்றும் யாழ். மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணலினி விஜயரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-8)

# மதுபோதையில் கைகலப்பு! கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவில் உள்ள மதுபானசாலையில் கைகலப்பில் ஈடுபட்டவர்கள், வீதியில் சென்ற முச்சக்கர வண்டியைக் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மதுபானசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மது அருந்திக் கொண்டிருந்த இரு தரப்பினரகளுக்கு இடையில் கைக்கலப்பு ஏற்பட்டுள்ளது.

அதனை அடுத்து, மதுபான சாலை உரிமையாளர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, பொலிஸார் அங்கு விரைந்த போது, கைகலப்பில் ஈடுபட்டிருந்த நபர்கள், பொலிஸாரையும் தாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் சென்றவர்களில் ஒருவர் , வீதியில் பயணித்த முச்சக்ர வண்டியை மறித்து, அதன் சாரதியை தாக்கி விட்டு, முச்சக்கர வண்டியை கொள்ளையடித்து அதில் தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் சென்றவர்களில், ஏனையவர்களில் இருவரை பொலிஸார் துரத்தி சென்று கைது செய்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் கைகலப்பில் காயமடைந்த நிலையில் காணப்பட்டமை யால், அவரைப் பொலிஸ் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மற்றையவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் ஏனையவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை வீதியில் சென்ற தன்னை வழிமறித்துத் தாக்கி, தனது முச்சக்கர வண்டியை கொள்ளையடித்து சென்றுள்ளார்கள் என முச்சக்கரவண்டி சாரதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில், முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

# போதை வியாபாரி வாக்குமூலம் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட போதை வியாபாரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இளைஞன் ஒருவர் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் கடந்த வாரம் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தி , பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள மன்றின் அனுமதியைப் பெற்று, விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், அவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில், கந்தரோடைப் பகுதியை சேர்ந்த இளைஞனை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 300 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 550 | 600 | 600 | 650 | 800 |
| தக்காளி | 450 | 450 | 450 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 220 | 250 |
| கோவா | 550 | 550 | 600 | 400 | 600 |
| கரட் | 850 | 750 | 800 | 650 | 800 |
| பூசணி | 120 | 150 | 150 | 150 | 200 |
| புடோல் | 150 | 150 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 600 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 280 | 200 |
| லீக்ஸ் | 400 | 450 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 500 | 500 | 500 | 380 | 500 |
| கறிமிளகாய் | 650 | 700 | 700 | 520 | 800 |
| முருங்கைக்காய் | 1500 | 1800 | 1200 | 1300 | 1800 |
| போஞ்சி | 600 | 350 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 60 | 50-100 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 200 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 500 | 550 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | 600 | 600 |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | -- | 200 |

# மீசாலை- அல்லாரை வீதி புனரமைப்பு பணி நிறுத்தம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட புனரமைக்கப்பட்டு வரும் மீசாலை - அல்லாரை வீதியின் பணிகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பல விமர்சனங்களையடுத்து வீதியின் புனரமைப்புப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டு வரும் மீசாலை - அல்லாரை வீதியின் புனரமைப்பின் தரம் தொடர்பிலும் புனரமைப்பின் போது பின்பற்றப்படுகின்ற நடைமுறை தொடர்பிலும் பொது மக்களால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அதனையடுத்து கடந்த 14 ஆம் திகதி குறித்த வீதிக்குச் சென்ற சாவகச்சேரி உப நகரபிதா ஞா.கிஷோர் மற்றும் உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் வீதி புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டதோடு வீதி அபிவிருத்தித் திணைக் களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தரோடு கலந்துரையாடி அப் பகுதி மக்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்றினை உருவாக்கிய பின்னர் வீதிப் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். அது வரை புனரமைப்பு வேலைகளை நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆனால் இதனை மீறி புனரமைப்பு பணிகள நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடரப்பட்டன. இந்த நிலையில் குறித்த வீதிக்குச் சென்ற உப நகரபிதா ஞா.கிஷோர் மற்றும் உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு வீதிப் புனரமைப்பின் குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டி மக்களை தெளிவுபடுத்தி கண்காணிப்புக் குழு ஒன்றினை அமைக்குமாறும் அதுவரை புனரமைப்புப்பணியை உடனடியாக நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்தார்.

அதனையடுத்து புனரமைப்புப் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டதோடு அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(8-30)

# திடீர் சுற்றிவளைப்பு நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஹெரோயின், கஞ்சா, போதை மாத்திரைகள் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கந்தரோடை பகுதியில் வைத்து 50 கிராம் ஹெரோயின் மற்றும் 1000 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் கஞ்சாவுடன் ஒருவரும், போதை மாத்திரைகளுடன் இருவரும் என மொத்தமாக நால்வர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்க, யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயமஹா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தில்ருக் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.எஸ்.ராமநாயக்க அவர்களின் தலைமையில், சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் சிறிமாலின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (8-104-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியம் பாராட்டு

(கொழும்பு)

2023/2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை மாகாண மட்டத்தில் பாராட்டும் நிகழ்ச்சித் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

அங்கு, 2023/2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 60 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நிதி புலமைப்பரிசில் மற்றும் சான்றிதழ்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2023/2024 பரீட்சைகள் தொடர்பாக பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகளை கருத்தில் கொண்டு இந்த மாணவர்கள் தெரிவு, மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் செயற்படுத்தப்படும் திட்டத்தின் முதல் நிகழ்ச்சித்திட்டமாக, 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, வட மாகாண மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு 2025 ஜூன் 22 ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவ்வாறு பாராட்டப்படவுள்ளனர்.

இதேவேளை, ஏனைய மாகாணங்களிலும் விரைவில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (நி)

# மதுபோதையில் சாரத்தியம் பறிபோன இரு உயிர்கள்




(கொழும்பு)

ஹொரணை - கொழும்பு பிரதான வீதியில் கோரலம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் உயிரிழந்துள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 09.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கார் ஒன்று, வீதியைக் கடக்க முயன்ற நால்வர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோரலம பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வொன்றுக்கு சென்ற சகோதரிகள் இருவர் தங்களது இரண்டு மகள்களுடன் அருகில் உள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக வீதியை கடக்க முயன்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நால்வரும் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சகோதரிகள் இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

45 மற்றும் 50 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவரே உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 11 மற்றும் 17 வயதுடைய இரு மகள்களும் களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், விபத்தினை ஏற்படுத்திய காரின் சாரதி மதுபோதையில் இருந்ததாக தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து 28 வயதுடைய கார் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரகஹ ஹேன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# நீதி அமைச்சு நிறுவகங்களில் 6000 வெற்றிடங்கள்-ஹர்ஷ

(கொழும்பு)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுடன் தொடர்புபட்ட நிறுவகங்களில் சுமார் ஆறாயிரம் வெற்றிடங்கள் இருப்பதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் மாத்திரம் 2,000 வெற்றிடங்கள் இருப்பதாகவும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் விற்பனைக்கு

(கொழும்பு)

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சுக்கு சொந்தமான பயன்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்விமனுக் கோரல் கோரப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களில் 16 சொகுசு வாகனங்கள் 3 பழைய வாகனங்கள் மற்றும் 3 ஏனைய வாகனங்களும் உள்ளடங்குவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# நடுவானில் இயந்திரக் கோளாறு திடீரென தரையிறக்கப்பட்ட விமானம்

லண்டனிலிருந்து சென்னைக்கு 360 பயணிகளுடன் புறப்பட்ட பிரித்தானியப் பயணிகள் விமானம், திடீரென தரையிறக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நடுவானில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சென்னை வந்த பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் மீண்டும் லண்டனிலேயே தரையிறக்கப்பட்டது.

லண்டனில் இருந்து 360 பயணிகளுடன் பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் சென்னை வந்து கொண்டிருந்தது. ஆனால் புறப்பட்ட சில நிமிடங்களில் விமானத்தில் நடுவானில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது.

உடனே இதுகுறித்து விமானி லண்டன் விமான நிலையத்திற்கு தகவல் அளித்தார். பின்னர் அந்த விமானம் மீண்டும் லண்டனிலேயே அவசரமாக தரையிறக்கப்பட்டது.

குறித்த விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியதும் பயணிகள் அனைவரும் பத்திரமாக தரையிறங்கினர் என்று பிரிட்டிஷ் ஏர்வேஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி)




முல்லைத்தீவு மாவட்ட செயலக மத்தியஸ்த அலகின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாடசாலை மத்தியஸ்த சபை பயிற்சி நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் நடைபெற்றது. (படம்: தவசீலன்)


## யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் வ.து
## பதவி வெற்றிடம் வெளிவாரி நியமனம்

யாழ் மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆண், பெண் இருபாலரும்)

01 பதவி/சம்பள அளவுத்திட்டம் : அலுவலக உதவியாளர் 317/16
(சுற்றுநிருபம் 02/2025 இன்படி)
31975-335 X 10-350 X 10-38825.00
வெற்றிடம் - 01
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைவாக ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

02. தகமைகள் (சுற்றுநிருபம்-01/2021)
அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்
அல்லது
ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/08ஆம் தர கல்விச்சான்றிதழ்.

03. வயதெல்லை : 18-45 இற்கு உட்பட்டிருத்தல்.

04. விண்ணப்ப முடிவு திகதி : 05.07.2025

05. குறிப்பு: கூட்டுறவுச் சங்கங்களில் நிரந்தரப்பணியாளர்களாயின் உரிய சங்கத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். (கூட்டுறவுப்பணியாளர்களாயின் வயதெல்லை ஏற்புடையதல்ல)
விண்ணப்பப்படிவத்தினை யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் இல. 95 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் ரூபா 100.00ஐ செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“அலுவலக உதவியாளர் 317/16 பதவிக்கான விண்ணப்பம்”** எனக்குறிப்பிட்டு தலைவர், யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் இல. 95 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**ப.கேசவதாசன்.**
**தலைவர்.**
**யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்.**
**இல 95, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல 0212222639** 17.06.2025

(சி-3209)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## பாலம் இடிந்து விழுந்து விபத்து
**★ 4 பேர் உயிரிழப்பு**
**★ 20 பேர் மாயம்**



(டில்லி)
இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் புனே மாவட்டத்தில் இந்திராயணி ஆற்றின் மீதுள்ள பாலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடிந்து விழுந்தது.

இந்தப் பாலம் 60 ஆண்டுகள் பழமையான இரும்புப் பாலம் ஆகும். விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை இந்தப் பாலத்தில் அளவுக்கு அதிகமாக சுற்றுலாப் பயணிகள் குவிந்திருந்தனர். இதனால், பாரம் தாங்க முடியாமல் பாலம் இடிந்து விழுந்தது. அப்போது, பாலத்தில் இருந்த சுற்றுலாப் பயணிகள் இந்திராயானி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற மீட்புப் படையினர், நான்கு பேரின் உடல்களை மீட்டனர். மேலும், ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட 20 இற்கும் மேற்பட்டோரை தேடிவருகின்றனர். (ஙி)




# போர் நிறுத்தத்திற்
# உச்சகட்ட கோப
## கொதி நிலையில்

(டெஹ்ரான்)
**போர் நிறுத்தம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தத் தயாராக இல்லை என்று ஈரான் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

ஈரான் தொடர்ந்து இஸ்ரேலியத் தாக்குதலுக்கு உள்ளாகி வரும் நிலையில் இவ்வாறான ஒரு அறிவிப்பை ஈரான் விடுத்துள்ளது.

இது தொடர்பில் மத்தியஸ்தர்களான கட்டார் மற்றும் ஓமானிடம் ஈரான் கருத்து தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சுற்றுலாப் பயணிகள் வருகையை குறைக்க நோர்வேயில் புதிய வரி



(ஒஸ்லோ)
ஐரோப்பிய நாடான நோர்வே, உலகின் மிக அழகான இயற்கைக் காட்சிகள் நிறைந்த நாடுகளில் ஒன்றாகும். இதனால் ஆண்டுதோறும் 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நோர்வேக்கு படை எடுக்கின்றனர்.

இவர்களால் நாட்டின் இயற்கைச் சூழல் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக புகார் எழுந்தது. எனவே சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக சுற்றுலா வரியை, அடுத்தாண்டு ஜூனில் அறிமுகப்படுத்த உள்ளனர். அதன்படி தங்குமிடங்கள், கப்பல் பயணங்கள், மற்றும் பிற சுற்றுலா சேவைகளைப் பயன்படுத்தும் போது, கட்டணத்துடன் சேர்த்து 3 சதவீத சுற்றுலா வரி வசூலிக்கப்படும்.

இந்த வரியால் கிடைக்கும் வருவாயை சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உள்ளூர் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கழிப்பறை போன்ற பொதுச் சேவைகளுக்கு பயன்படுத்த உள்ளனர்.

இத்தாலி, பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து போன்ற பிற ஐரோப்பிய நாடுகளின் பிரபல சுற்றுலா தலங்களில், ஏற்கனவே இது போன்ற வரி வசூலிப்பு நடைமுறையில் உள்ளது. (ஙி)

## அமெரிக்க தூதரகப
## ஈரான் ஏவுகணைத் த



(ஜெருசலேம்)
இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் தூதரகம் சேதமடைந்துள்ளதால் தற்காலிகமாக மூடப்படுவதாகவும், யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதர் மைக் ஹக்கபி தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதத்தை தயாரிப்பதில் ஈரான் தீவிரமாக உள்ளது என்றும் அது தங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கூறி ஈரான் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...கு வாய்ப்பில்லை ...பத்தில் ஈரான்!

## ...் பாலைவன பூமி


இந்த நிலையில், இரு நாடுகளும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதால், போர்நிறுத்தம் எட்டப்படுவது சிக்கலான விடயம் என்றும் ஈரானிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, இஸ்ரேலும் ஈரானும் போர் நிறுத்தத்தை எட்ட முடியும் என்று தான் நம்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சில நேரங்களில் அவர்கள் அதை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் ஜி-7 உச்சி மாநாட்டிற்குச் சென்றபோது செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், அமெரிக்கா இஸ்ரேலைத் தொடர்ந்து ஆதரிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், ஈரான் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு இஸ்ரேலிடம் கோரினாரா? இல்லையா? என்பது குறித்து ட்ரம்ப் கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



# பெருவில் நிலநடுக்கம்!

## ❖ ஒருவர் உயிரிழப்பு

## ❖ ஐவர் காயம்



(லிமா)

தென் அமெரிக்க நாடான பெருவில், நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டரில் 6.1 என்ற அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தேசிய நிலஅதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

பெரு நாட்டில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் அந்நாட்டு மக்களிடையே பெரும் பீதி நிலவுகிறது. தலைநகர் லிமா அருகே உள்ள கால்லோவில் இருந்து 30 கி.மீ. தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிக்டரில் 6.1 என்ற அளவில் பதிவாகி உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் பலமாக குலுங்கின. லிமாவில் வீட்டு சுவர் சரிந்து விழுந்ததில் ஒருவர் பலியானார். மேலும் 5 பேர் பலத்த காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

பல இடங்களில் தொடர் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. தலைநகர் லிமாவை நிலநடுக்கம் உலுக்கியது. சுனாமி எச்சரிக்கை ஏதும் இதுவரை விடுக்கப்படவில்லை. இந்த நிலநடுக்கத்தால் லிமாவில் நடைபெற்று வந்த கால்பந்து போட்டி நிறுத்தப்பட்டது. (நி)

# ...ம் அருகே ...தாக்குதல்

இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக ஈரானும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேலும், ஈரானும் தொடர்ந்து பரஸ்பரத் தாக்குதலில் ஈடுபட்டு வருவதால் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரானும் இஸ்ரேலும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று அமெரிக்க ஜனதிபதி ட்ரம்ப் வலியுறுத்தினார்.

ஆனால் போர்நிறுத்த பேச்சுவார்த்தைக்கு தற்போது வாய்ப்பில்லை என்று ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



# இஸ்ரேல் - ஈரான் மோதல் எதிரொலி

## நெதன்யாகுவின் மகனின் திருமணம் ஒத்திவைப்பு

(ஜெருசலேம்)

அணு ஆயுதத்தை தயாரிப்பதில் ஈரான் தீவிரமாக உள்ளது என்றும் அது தங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக ஈரானும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல்-ஈரான் இடையேயான கடும் மோதலால் மத்திய கிழக்கு பகுதியில் போர்ப்பதற்றம் நீடித்து வருகிறது

இஸ்ரேலும், ஈரானும் தொடர்ந்து 3 ஆவது நாளாக பரஸ்பர தாக்குதலில் ஈ பட்டு வருவதால் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்



ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் மகனின் திருமணம் ஈரான் தாக்குதல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நெதன்யாகுவின் மகன் அவ்னர் நெதன்யாகு, தனது காதலி அமித் யார்தேனியை திருமணம் செய்து கொள்ளவிருந்தார்.

இஸ்ரேலிய பணயக் கைதிகள் இன்னமும் காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், நெதன்யாகு குடும்பத்தினர் கொண்டாட்டத்தில் ஈடுபடுவதா? என்று இஸ்ரேலில் எதிர்ப்பு எழுந்த நிலையில், திருமணம் ஒத்திவைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்களை ஒழிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

## கொரிய தூதுவரிடம் ஹர்ஷன தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் முதன்மை நோக்கமானது மோசடி மற்றும் ஊழலை ஒழித்தல் என நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப் பெரும தெரிவித்தார்.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப் பெரும மற்றும் இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியான் லீ ஆகியோருடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் நிதி ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை தூதருக்கு விளக்கிய அமைச்சர் சூரியப் பெரும மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் முதன்மை நோக்கமானது, மோசடி மற்றும் ஊழலை ஒழித்தல், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாகும் என்று தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1988- இந்து
நட்சத்திரம்: அனுசம்
8இல்செவ்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: Sales manager (swiss)
எதிர்பார்ப்பு: Swiss,German
தொ.இ: B/15653

பிறப்பு:1991-RC
நட்சத்திரம்:ஆயிலியம்
1இல் செவ்
உயரம் :5'6"
தகைமை/தொழில்- A/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15656

பிறப்பு:1991-இந்து
நட்சத் திரம்:ரேவதி
உயரம் :5'7"
தகைமை/தொழில்:BSC,Teachnician
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15658

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்:விசாகம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்-HNDE, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15659

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
5இல்சூரி செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Dip in Banking Finance, Assistant Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15660

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்: மகம்
7இல் செவ்
கி-பா-66
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc,Civil Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி, IT field
தொ.இ: G/15699

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்:சித்திரை
உயரம் : 5'8"
தகைமை/தொழில்: Bsc, MBA, Engineer
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ: G/12171

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்: அனுசம்
1இல்செவ்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: FineArts, DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு,விவாகரத்தானவர்
தொ.இ: G/15521

பிறப்பு-1991 - இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்:A/L, London
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15272

பிறப்பு-1991 - இந்து
நட்சத்திரம-மகம்
கிபா-27
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: DO
எதிர்பார்ப்பு - Degree and Employee
தொ.இ: G/15278

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 396

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# இருட்டு

இருட்டைக் கண்டால் பயம் உண்டாகுதே. அது ஏன்? என்று ஒரு கேள்வியை ஒரு பெரியவரிடம் (ஓஷோ) விடம் கேட்டார்கள்! அதற்கு அவர் பதில் சொல்கின்றார். மனிதனுடைய ஆதிகால வாழ்க்கையிலே ஏற்படுத்திக் கொண்ட பயம் இது வேரூன்றி இருக்கு. இன்னமும் போகவில்லை.

50 ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் மனிதன் குகைகளிலே வாழ்ந்தான். பகலிலே பயம் இருக்காது. இரவிலே மிருகங்கள் தாக்கும், கொல்லும் . நிம்மதியாக தூங்கக் கூட முடியாது. அதனாலே அந்த மனிதனுக்கு இரவு என்றால் மரணம். பயம் என்று பழகிப் போய்விட்டது.

மனிதர்களுடைய எல்லா மனதையும் சேர்த்து மொத்தமாக ஒரு மனம் உண்டு. மனிதர்களுடைய நினைவு இந்த மொத்த மனதிலே யும் பதிந்திருக்கின்றது, பரவுகின்றது. இந்த மொத்த மனதிலே இருட்டுப் பற்றிய பயம் பதிந்து நீடிக்கிறது என்கின்றார் அவர்.

இந்தக் காலத்திலே இரவைப் பகலாக்க எவ்வளவோ விளக்கு எல்லாம் வந்து விட்டது. இரவிலே மிருகங்கள் வந்து தாக்கும் என்கின்ற நிலைமை இல்லை. பாதுகாப்பான வீடுகள். விலங்கு களும் விலகிப் போயிவிடுகின்றது. இருந்தாலும் அந்தப் பழங்கால பயம் இருட்டுப்பயம் இன்னமும் விட்டுப் போக வில்லை.

இன்னொரு விடயம் இருட்டிலேயிருந்து வெளிச்சத்திற்கு வராத மனிதர்களும் இன்றைக்கு அதிகம்! ஒரு ஆள் ஆற்றிலே மீன் பிடிப்பதற்காகப் போனான். இன்னும் விடியவில்லை. அதற்குள்ளேயே வலையை எடுத்துக் கொண்டு கிளம்பிப் போய்விட்டான். வெளிச்சம் வருவதற்கு முன்பே போய் சேர்ந்துவிட்டான்.

விடியும் வரை என்னசெய்வது? ஆற்றங்கரையிலே உட்காரந்து காலை ஆட்டிக் கொண்டிருந்தான். காலிலே ஏதோ ஒரு சின்ன மூட்டை தட்டுப்பட்டுது.

இருட்டிலே அது என்ன என்று சரியாகத் தெரியவில்லை. மூட்டைக்குள்ளே சின்ன சின்ன கற்கள் நிறைந்திருந்தது. சும்மா பொழுது போக வேண்டும் என்பதற்காக இவன் அந்த மூட்டைக் குள்ளே இருந்து ஒவ்வொரு கல்லாக எடுத்து ஆற்றிலே வீசிக் கொண்டிருந்தான். விடியும்வரைக்கும் வேறு வேலை இல்லை என்பதனாலே இப்படி செய்துகொண்டிருந்தான்.

கிழக்கே மெதுவாக வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது. பொழுது விடிவதற்கான அறிகுறி. அதற்குள்ளே முட்டையில் இருந்த எல்லாக் கல்லையும் வீசியெறிந்து விட்டான். கடைசியாக ஒரே ஒரு கல் மட்டும்தான் கையிலே மீதமாக இருந்தது. வெளிச்சம் வந்ததும் அந்தக் கல்லைப் பார்த்தான்

அப்படியே திகைச்சுப் போய்விட்டான். அடடா இதுவரைக் கும் தெரியாமல் செய்து விட்டோமே என்று நினைத்தான். ஏன் தெரியுமா? அவன் கையிலே இருந்தது வெறும் கல் இல்லை. விலை உயர்ந்த இரத்தினக்கல் அது. இருட்டிலே என்ன என்று புரியாததனாலே மூட்டையில் இருந்து எல்லா இரத்தினக்கல்லையும் ஆற்றிலே வீசி எறிந்திருக் கின்றான். இப்போது அவனுக்கு அழுகையே வந்துவிடும் போல இருந்தது.

வாழ்க்கையை வசதியாக்குவதற்கான வாய்ப்பு அவனுக்கு இருந்தது. இருந்தாலும் இருட்டிலே அதை இழந்துவிட்டான். ஒரு வகையிலே அவனுக்குக் கொஞ்சம் அதிஷ்டம் இருந்திருக்கின்றது. அதனாலே தான் அந்தக் கடைசிக் கல்லை எறிவதற்குள்ளேயே வெளிச்சம் வந்துவிட்டது.

பல பேருக்கு அந்த அளவுக்குக்கூட அதிஷ்டம் இருப்பதில்லை. எல்லாவற்றையும் வீசியதற்கு அப்புறம் தான் வெளிச்சம் வரும். என்ன என்று விபரம் தெரியாமலே எழுந்துவிடுவார்கள்.

வாழ்க்கை என்பது ஒரு பெரிய புதையல். அதைப் புரிந்து கொள்ளாமலே மனிதன் அதை வீசியெறிந்து கொண்டிருக்கின் றான் என்கின்றார் அந்தப் பெரியவர் (ஓஷோ). சிலபேருக்கு புரிந்து கொள்வதற்கு நேரம் வரும். அதற்குள்ளே வாழ்நாள் எல்லாம் ஓடிப்போய் விடும். அதற்குபின் என்ன செய்வது?

நம்ம ஆள் ஒருவர். கையிலே ஒரு சின்ன பையோடு வந்து கொண் டிருந்தார். பை உள்ளே ஏகப்பட்ட நகைகள், இரத்தினக் கற்கள் எல்லாம் இருக்கு.

வந்துகொண்டிருந்தவன் திடீர் என்று அந்தப்பையை அப்படியே ஒரு குளத்திலே எறிந்துவிட்டான். மகான்கள் தான் இப்படி பற்றில்லாமல் இருப்பார்கள். என்ன இது? விலை மதிப்புள்ள அந்தப் பையை இப்படிக் குளத்திலே வீசிவிட்டீர்களே. இதற்கு என்ன அர்த்தம்? என்று கேட்டார் அவன் கூட வந்தவர். அவன் மெதுவாக இவர் காதோடு காதாக, ஒரு பொலிஸ் பின்னாலே வந்து கொண்டிருக்கிறார். அவர் போனதற்குப் பின்னால் இதை எடுத்துக் கொள்வேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு உதவிகளை நம்பியிருக்காமல் எமது சொந்தக் காலில் நிற்போம்!



## ஆளுநர் சுட்டிக்காட்டு

**(கிளிநொச்சி)**

**வெளிநாட்டு உதவிகளில் நாம் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது. வெளிநாட்டிலுள்ள அடுத்த தலைமுறைகள் - சந்ததிகள் மாறும்போது இந்த உதவிகள் எதிர்காலத்தில் நின்றுபோகக் கூடும். எனவே நாம் எமது சொந்தக் காலில் நிற்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி 4 ஆவது ஆண்டாகவும் இல்ல மைதானத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் - பதில், சமுர்த்திப் பணிப்பாளரும் இல்லத் தலைவருமான ச.மோகனபவன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர் தனது உரையில், இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலராகவும், மாவட்டச் செயலராகவும் இருந்த காலத்தில் இந்த இல்லத்துக்கு வந்திருக்கின்றேன். இன்று 16 ஆண்டுகளின் பின்னர் வருவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இன்றைய எமது சமூகச் சூழல் மாற்றமடைந்து செல்கின்றது. பல குடும்பப் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

எனவே அந்தப் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு இவ்வாறான சிறுவர் இல்லங்கள் அவசியமாகின்றன. பிள்ளைகளுக்கு வீடுகளே சிறந்த பாதுகாப்பு என்றபோதும், அந்த வாய்ப்புக்கிடைக்காத பிள்ளைகளுக்கு இவ்வாறான இல்லங்களே அரணாக அமைகின்றன.

இன்று மாணவர்கள் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றமையால் பல பாடசாலைகள் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து மூடப்பட்டு வருகின்றன.

ஆனால் இங்கு 200 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்றார்கள். இதுவும் ஒரு பாடசாலைதான். சிறுவர் இல்லம் ஒன்று நடத்தும் விளையாட்டுப்போட்டியை இப்போது தான் நான் முதன்முதலில் காண்கின்றேன். இது மிகச் சிறந்த முன்னுதாரணம்.


சிறுவர்களுக்கு பொழுதுபோக்குக்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் திசைமாறாமல் இருப்பதற்கு விளையாட்டு அல்லது கலை ஊடாக அதை வழங்க வேண்டும்.

இந்தச் சிறுவர் இல்லம் விளையாட்டுப்போட்டியையே நடத்தியிருக்கின்றது. இந்த விளையாட்டுப்போட்டியைப் பார்க்கும்போது, நீங்கள் ஒவ்வொருவரும் எப்படி உற்சாகமாக பங்குபற்றினீர்கள் என்பதைக் கண்டுகொண்டேன். இந்தச் செயற்பாட்டை ஏனைய இடங்களிலும் முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் சிறுவர் இல்லச் சிறுவர்களுக்கு தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை - என்.வி.க்யூ. சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கவிருக்கின்றார்.

இதன் மூலம் சிறுவர் இல்லத்திலிருந்து சிறுவர்கள் சமூகத்துக்குச் செல்லும் போது அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்க முடியும் என்றார். (8)

# முல்லைத்தீவில் இருகடைகள் தீயில் எரிந்து முற்றாக நாசம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் மாஞ்சோலை பொது வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கடைத்தொகுதியில் நேற்றுக் காலை தீபரவல் இடம்பெற்றது.

இந்த தீப்பரவலானது முதலில் MVM உணவகத்தில் ஆரம்பித்து அருகில் உள்ள ANSAF பாதணிக் கடைக்கு பரவி அதிக தீ விபத்தாக மாறியது.

இதில் குறித்த உணவகம் மற்றும் பாதணிக் கடை முற்று முழுதாக எரிந்து அழிவடைந்துள்ளதோடு அருகில் உள்ள மேலும் இரு கடைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த தீப்பரவல் ஏற்பட்டதும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கரைதுறைப்பற்று பிரதேச சபை, கடற்படையினர், இராணுவத்தினர் மற்றும் வர்த்தகர்கள், பொது மக்கள் இணைந்து நீர்த்தாங்கிகள் மூலம் தீப்பரவலை முற்று முழுதாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்தினை பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பார்வையிட்டிருந்தனர்.

அத்தோடு தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்பு படைப்பிரிவு இல்லாமையினால் கிளிநொச்சி மாவட்டத்தின் உதவியை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நாடியிருந்தது. இருப்பினும் தீப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதனால் கிளிநொச்சி மாவட்ட தீயணைப்புப் படைப்பிரிவின் உதவி கோரிக்கை இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தீயணைப்பு படைப்பிரிவின் அவசியம் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(8-299)

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய கொல்களத்திற்கு சீல்!

(மன்னார்)

மன்னார் நகரசபை எல்லைக்குள் காணப்படும் மாடு அறுக்கும் கொல்களம் ஒன்று சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை காரணமாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொது சுகாதார வைத்திய பணிமனை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் அமைந்துள்ள மாடு அறுக்கும் கொல்களமானது பல வருடங்களாக சுகாதார நடைமுறைகளுக்கும் அரச அறிவுறுத்தல்களுக்கும் அமைய இயங்கி வராத நிலையில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மன்னார் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து குறித்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக மாடுகளை அறுக்கும் பகுதி அசுத்தமாக காணப்பட்டமை, உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை, விலங்குக் கழிவுகள் சுற்றுப் பகுதிகளில் காணப்பட்டமை, கழிவு அகற்றும் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படாமை, கழிவு நீர் தேங்கி காணப்படுகின்றமை, மாடுகளை அறுக்கும் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை, அரச அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாமை, மாடு அறுப்பதற்குரிய கட்டமைப்பு காணப்படாமை போன்ற பல்வேறு குறைபாடுகளின் அடிப்படையில் குறித்த கொல்களத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது

குறித்த செயற்பாட்டின் காரணமாக மன்னார் நகரசபைக்கு பல இலட்சம் வருமான இழப்பு ஏற்படவுள்ள போதிலும் மக்களின் சுகாதார வசதிகளை கருத்தில் கொண்டு நகரசபையும் குறித்த சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## அனர்த்த முகாமைத்துவக்குழுக் கூட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் செயற்பாடுகள், மற்றும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாத்தல் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எதிர் காலத்தில் இயற்கை அனர்த்தம் மற்றும் செயற்கை அனர்த்தங்களில் இருந்து எவ்வாறு முன்னெச்சரிக்கையாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருப்பதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் தற்போது நீரில் மூழ்கி அதிக இறப்புக்கள் இடம்பெறுகின்றமையும், குளவிகொட்டு முதலான அனர்த்தங்கள் தொடர்ந்து செல்வதால் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மூலம் பல விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனவும் மாவட்டத்தின் ஏனைய அனைத்துத் திணைக்களங்களுடனும் இணைந்து எவ்வாறு சிறப்பான முறையில் எதிர்கால செயற்திட்டத்தினை முன்னெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (8-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 800





னேனே? என் அருமைத் தோழர்களாகிய நீங்கள் மூன்று பேரும் ஒருவரையொருவர் கடித்துத் தின்று விடும் நிலைக்கு வந்து விட்டீர்கள்.

இதற்கெல்லாம் நான் உங்கள் பேரில் குற்றம் சொல்லவில்லை. அந்தப் பழுவூர் ராணியின் சக்தி அப்படிப்பட்டது என்பதை நானே உணர்ந்திருக்கிறேன். நீயும் கந்தமாறனும் குதிரை மீது ஏறிச் சற்று முன்னால் மெதுவாகப் போய்க் கொண்டிருங்கள். இவனுடைய பிரயாண விபரங்களைக் கேட்டுக் கொண்டு நான் சற்றுப் பின்னால் வருகிறேன். உங்கள் குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரித்து உண்மையைக் கண்டுபிடிக்கிறேன். ஆனால் ஒன்று நிச்சயமாய் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் மூன்று பேரும் சிநேகமாக இருந்தே தீர வேண்டும்.

ஒருவருக் கொருவர் சண்டை போட்டுக் கொண்டீர்களானால், அதைக் காட்டிலும் எனக்கு அதிருப்தி உண்டாக்குவது வேறொன்றுமிராது!"

பார்த்திபேந்திரனும், கந்தமாறனும் வேறு வழியின்றித் தத்தம் குதிரை மீது ஏறி முன்னால் சென்றார்கள். அப்போது ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவன் அருகில் வந்து அவன் காதோடு, "அப்பனே! நீ வெகு கெட்டிக்காரனாகி விட்டாய்! பொய்யும் சொல்லாமல் உண்மையையும் வெளியிடாமல் வெகு சாமர்த்தியமாகப் பேசித் தப்பித்துக் கொண்டாய்!" என்றான்.

அப்போதுதான் ஆதித்த கரிகாலன் பார்வை அங்கு வந்த ஆழ்வார்க்கடியான் மீது விழுந்தது.

"ஓகோ! இவன் யார்? எப்போதோ, எங்கேயோ பார்த்த முகமாக இருக்கிறதே!" என்று கேட்டான்.

"ஆம், அரசே! சில ஆண்டுகளுக்கு முன்பு என்னைப் பார்த்திருக்கிறீர்கள்! உன் குரல் கூடக் கேட்ட குரலாகத்தானிருக்கிறது. ஆம் ஐயா! மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மிக முக்கியமான ஒரு தருணத்தில் என் குரலைக் கேட்டீர்கள்.

ஆதித்த கரிகாலரின் முகத்தில் திடீரென்று ஒரு கரிய நிழல் வேகமாகப் படர்வது போலிருந்தது. "மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்- முக்கியமான தருணம்.. அது என்ன?.. வைகை நதித் தீவில் பகைவனைத் தேடி அலைந்த போது நான் கேட்ட குரலா? அப்படியும் இருக்க முடியுமா?"

"அந்தக் குரல் என் குரல் தான் அரசே! பகைவன் ஒளிந்திருந்த இடத்தைத் தங்களுக்கு மரத்தின் மறைவிலிருந்து சொன்னவன் நான்தான்!"

"ஆகா! என்ன பயங்கரமான தினம் அது? அன்றைக்கு எனக்குப் பிடித்திருந்த வெறியை நினைத்தால் இன்றுகூட உடல் நடுங்குகிறது. வைஷ்ணவனே! நீ ஏன் அன்று காட்டில் மறைந்திருந்தாய்? எதற்காக உன்னை அசரீரியாக மாற்றிக் கொண்டாய்?"

பார்த்திபேந்திரனுடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவனுடைய கைகள் துடித்தன. உதடுகளும் துடித்தன. உடல் ஆடியது. "ஐயா! இந்த மூடன் என் மீது குற்றம் சுமத்துகிறான் என்று தோன்றுகிறது. இளவரசரை நானே கொன்று விட்டேன் என்று கூடச் சொல்லுவான் போலிருக்கிறது. இதை நான் ஒரு கணமும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது!" என்றான்.

கரிகாலன் அவனை உற்று நோக்கி, "பார்த்திபா! நான் தான் சொன்

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## கலப்படம்




(நேற்றைய தொடர்ச்சி)

சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை, எடுத்துட்டு வாருங்கள் என்று அவசரமாய் சொன்னான்.

அவர் காரிலிருந்து ஒரு சூட்கேசை எடுத்து வந்தார். கடையைத் தாண்டி இருந்த அவன் வீட்டுக்குள், அவரை அழைத்து சென்றவன், கதவைச் சாத்திக் கொண்டு எவ்வளவு இருக்கிறது என்று கேட்டான்.

அவர் பெட்டியைத் திறந்து காட்டினார். இவனுக்கு மூச்சே அடைத்தது போல் இருந்தது. அவ்வளவு பணம் கட்டுக் கட்டாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

எடுத்து எண்ணிப் பாருங்கள் என்று அவர் புன்னகையுடன் சொன்னார். இவனுக்கு அவ்வளவு பணத்தை பார்த்ததில்லை என்றாலும் அதைத் தொட்டுப் பார்க்க ஆசை. ஆசைக்காக ஒரு கட்டை எடுத்துப் பட படவென விரித்து பார்த்தான். அதனுடைய மொட மொடப்பு அவனுக்கு ரொம்ப மகிழ்ச்சியாய் இருந்தது.

சரி இது பத்திரமாக உங்களிடம் இருக்கட்டும், நான் ஆறு மாதம் கழித்து வந்து வாங்கிக் கொள்கிறேன், அதற்குள் உங்களுக்கு முக்கியமான செலவு எதுவும் ஏற்பட்டால் தைரியமாக இதில இருந்து எடுத்து செலவு செய்யுங்கள். ஆனால் பார்த்து கொள்ளுங்கள். உங்களிடம் நிறையப் பணம் இருக்கிறது என்று தெரிந்தால் திருடர்கள் புகுந்து விடுவார்கள். அவர் சொல்லவும், தன்னை எடுத்துச் செலவு செய்யச் சொல்லி விட்டாரே என்கிற சந்தோசத்தில் தலை, கால் புரியாமல் நீங்கள் கவலைப்படாதீங்கள் நான் பார்த்துக் கொள்கின்றேன் என்று அவருக்கு விடை கொடுத்தான். காரில் ஏறப் போனவர் ஏதோ ஞாபகம் வந்தவர் போல் அது இருக்கட்டும், எனக்கு இப்ப கொஞ்சம் பணம் தேவைப்படும், இந்தப் பணத்தை எடுத்தால் வீணா பிரச்சினை தான் வரும். உங்களிடம் பணம் ஏதாவது இருந்தால் கொடுங்கள்.

ராசாராமன் சந்தோசத்தின் உச்சியில் இருந்தான், என்ன இப்படி கேட்டு விட்டீர்கள். இவ்வளவு பணம் கொடுத்து விட்டு உங்களைச் சும்மா அனுப்ப முடியுமா? இருங்க வருகிறேன். வீட்டுக்குள்ளே சென்றவன், தான் கடைச்சரக்கை விற்று வைத்திருந்த பணம் மொத்தத்தையும் எடுத்து வந்தான். ஐயா இதில் ஒரு இலட்சம் பணம் இருக்கு. என்னுடைய மொத்த பணம் என்று குலைந்து கொண்டே சொன்னான்.

அவர் ராசாராமின் தோளைத்தட்டிக் கொடுத்து, உங்களின் உதவியை மறக்க மாட்டேன், நீங்கள் எவ்வளவு என்றாலும் எடுத்துச் செலவு செய்யுங்கள், ஆனால் பத்திரம் என்று சொன்னவர் அவனிடமிருந்து பணத்தை பெற்றுக் கொண்டு காரில் ஏறிச் சென்றார். ஆறு மாதங்களுக்கு மேல் ஆகி விட்டது, அவர் வரவே இல்லை. போன் செய்தாலும் எடுக்கவில்லை. மறுபடியும் பொருட்கள் எடுக்கவும் வழியில்லை. தான் சரியாக கடை விபரங்களை கேட்டு கொள்ளாததால் பொருட்கள் எங்கு போய் வாங்குவது என்று திகைத்தான்.

சரி வழக்கம்போல பழைய கடையிலேயே டவுனுக்கு போய் சரக்கு வாங்கி வியாபாரம் செய்யலாம் என்று நினைத்தவன், அந்த சூட்கேசை திறந்து இரண்டு கட்டு பணத்தை எடுத்துக்கொண்டு பக்கத்து ஊருக்கு சென்றான்.

கடைக்கு சரக்கு வாங்கிய பின், சரக்குக்கு உண்டான தொகையாக இவன் எடுத்து வந்த பணக் கட்டை அவர்களிடம் கொடுத்தான். அவர்கள் அதை மேலும் கீழும் பார்த்து விட்டு, அவனிடம் இந்த பணத்தை எங்க வாங்கனீங்க என்று கேட்டனர். இவனுக்கு கொஞ்சம் பயம் வந்தது, இருந்தாலும், சமாளித்துக் கொண்டு, ஒரு பார்ட்டி கொடுத்துச்சு என்றான்.

அவர்கள் நல்லா ஏமாந்திட்டீங்களா? என்று சிரித்தனர். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. நல்லா பாருங்க என்று காண்பித்தனர். அப்பொழுது தான் கவனித்தான். பணம் ஒரு கட்டு அறுபது ரூபாயாகவும், மற்றொரு கட்டு எழுபது ரூபாயாகவும் இருந் தது.

தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்தவன், வேகம் வேகமாக ஊருக்கு வந்து சூட்கேசை திறந்து அதில் உள்ள பணத்தை கொட்டி பார்த்தான் அது எல்லாமே அறுபதாகவும், எழுபதாகவுமே இருந்தது. தலையில் கை வைத்து உட்கார்ந்து கொண்டவன், தான் வீட்டில் வைத்திருந்த ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு பணத்தை அவனிடம் கொடுத்தனுப்பியது ஞாபகத்துக்கு வந்தது.

குழந்தைகளே! கலப்படத்தில் வந்த பணம் கலப் படத் திலேயே போயிற்று பார்த்தீர்களா. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம் வாழ்க்கைத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் தக்க முதலீடு சூரிய மின்கலம்

அபிவிருத்தியடைந்த நாடுகளை ஆராய்ந்தால், அவை தங்கள் தேசத்துக்கு ஏற்றதும் உச்சமான விளைவைத் தரக்கூடியதுமான தொழில்துறைகளை இனங்கண்டு அவற்றில் அதீத முதலீடுகளைச் செய்து உச்ச பயனைப் பெறுவதைக் காண முடியும்.

அமெரிக்கா என்றதும் கோதுமை எங்களின் நினைவுக்கு வரும். அதேபோன்று நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் பசும்பால் உற்பத்தியால் பெரும் பொருளாதார எழுச்சியைப் பெற்றுள்ளன.

இங்கு நாடு என்பது மட்டுமல்ல. அந்த நாட்டின் பிராந்தியங்கள், மாநிலங்கள், பிரதேசங்கள் வெவ்வேறு வளங்களைக் கொண்டிருக்க முடியும்.

எனவே அந்தந்தப் பிரதேசங்களின் வளங்களை இனங்கண்டு அதற்கேற்றாற்போல் முதலீடுகளைச் செய்யும்போதுதான் உச்சமான பயனைப் பெற முடியும்.

இந்தவகையில் எங்கள் வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால், கடற்றொழில் எமக்குரிய மிகச்சிறந்த வளமாக உள்ளது.

இருந்தும் எங்கள் கடல் வளத்தை தக்க முறையில் பிரயோசனப்படுத்துவதற்கு எங்களிடம் உரிய தொழில் நுட்பங்களும் இல்லை. முதலீடுகளும் இல்லை.

போதாக்குறைக்கு இந்திய மீனவர்கள் எங்கள் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து எங்களுக்குரித்தான கடல் வளத்தை அள்ளிச் செல்கின்றனர்.

தவிர, எங்கள் வட மாகாணம் வருடத்தில் அதிகளவான சூரிய வெப்பத்தை பெறுகின்ற இடம். எனவே எங்களுக்கான சிறந்த முதலீடு சூரிய மின்கலங்கள் (solar) ஆகும்.

ஆம், சூரிய மின்கலங்களைப் பொருத்துவதன் ஊடாக அதிகளவு மின்சாரத்தை இங்கு உற்பத்தி செய்ய முடியும்.

அதேநேரம் சூரிய மின்கலங்கள் மூலமான மின் உற்பத்திக்காக முதலீடுகளைச் செய்வதற்கு நம் மத்தியில் பலரும் தயாராக உள்ளனர்.

எனினும் குறித்த மின் உற்பத்திகளை சேமித்து வைப்பதற்கும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் இலங்கை மின்சார சபையின் வட பிராந்தியத்தில் போதிய வளங்கள் இல்லை.

இதன் காரணமாக சூரிய மின்கலங்களுக்காக முதலீடுகளைச் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மையில் வடக்கு மாகாணத்தின் மிகச்சிறந்த முதலீடாக சூரிய மின்சக்தி மீதான முதலீடு உள்ளது.

எனினும் அதுபற்றிச் சிந்திப்பதற்கும் அரசாங்கத்துடன் கதைப்பதற்கும் எங்களிடம் எவரும் இல்லாத காரணத்தால், சோலர் இணைப்புக்கு விண்ணப்பங்களைக் கொடுத்து விட்டு நம் மக்கள் வானம் பார்த்து நிற்கின்றனர். இது தான் எங்கள் நிலைமை.

இன்று இராணுவத்தினருக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்ற ராஜபக்ஷவினரே

## அன்று பிரபாகரன் கூட செய்ய எண்ணாத கொடூரத்தை எமக்கெதிராக அரங்கேற்றினர்

சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இராணுவ வீரர்களை சிப்பாய்கள் என விளித்தமைக்காக ராஜபக்ஷர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். யுத்தம் நிறைவடைந்த பின்னர் அவர்கள் சிறைச்சாலையில் என்னை எவ்வாறு உபசரித்தனர் என்பதை யாரும் மறந்திருக்க வாய்ப்பில்லை. நேருக்கு நேர் போர்க்களத்தில் மோதிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கூட என் குடும்பத்தை பழிவாங்கவில்லை. ஆனால் ராஜபக்ஷர்கள் அதனை செய்தனர் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை(15) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ராஜபக்ஷர்கள் தான் இராணுவத்தினரைக் கொண்டு இலாபம் தேட முற்படுகின்றனர்.

இராணுவத்திற்கு சிப்பாய்களே ஆட்சேர்க்கப் படுகின்றனர். இராணுவ வீரர்கள் அல்ல. எனவே அது வெட்கப்படக் கூடிய சொற்பிரயோகம் அல்ல. அன்று யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத்தளபதியான என்னை சிறையிலடைத்து நன்கு உபசரித்தனர்.

என்னுடன் பணியாற்றிய, இராணுவத்தில் முக்கிய பதவி நிலைகளை வகித்த 35 இராணுவ அதிகாரிகள் ஓய்வூதியம் இன்றி சேவையிலிருந்து நீக்கப்பட்டனர்.

எனது மகள்கள் இருவரும் அமெரிக்காவிலிருந்து திரும்பும் போது, அவர்கள் விமான நிலையத்தில் பல மணித்தியாலங்கள் தடுத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

பிரபாகரன் கூட இவ்வாறு எமது குடும்பங்கள் மீது தாக்குதல்களை நடத்தவில்லை. ஆனால் ராஜபக்ஷர்கள் எம்மையும் எமது குடும்பத்தினரையும் பழிவாங்கினர் என்றார். (ம-4,7)

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில்

## யாழ்.பல்கலையின் தொல்லியல்துறை மாணவர்களும் பங்கேற்க வேண்டும்

சட்டவைத்திய அதிகாரி பிரணவன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி அகழ்வில் அடுத்த கட்டத்தின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் தமது பங்களிப்பை நல்க வேண்டும் எனச் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியைப் பெறும் முகமாக சட்டவைத்திய அதிகாரியினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின் அடுத்த கட்டமானது எதிர்வரும் 26ம் திகதி ஆரம்பமாகி 45 நாட்கள் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ள நிலையிலேயே சட்ட வைத்திய அதிகாரியால் குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.(ம-4,7,33)

முறைகேடாக கைதிகள் விடுதலை

## நீதி அமைச்சின் அதிகாரியிடம் சி.ஐ.டி கிடுக்குப்பிடி விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதி அமைச்சின் நிர்வாக அதிகாரி ஒருவரிடமிருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவு வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு நீண்ட விசாரணைகளின் பின்னர் குறித்த நபரிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இதற்கிடையில், கடந்த காலத்தில் வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை பயன்படுத்தி கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டார்களா? என்பது தொடர்பில் நாடு முழுவதும் உள்ள 28 சிறைச்சாலைகளிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைதிகள் விடுதலை தொடர்பாக அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் சிறைச்சாலை ஆணையர் நாயகம் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் மாயம்

(மொரட்டுவை)

மொரட்டுவை எகொட உயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகத்துவாரம் மீனவ துறைமுகத்துக் கருகில் நேற்று (16) மீன் பிடிப்பதற்காக இரு மீனவர்கள் கடலுக்குச் சென்ற நிலையில் மீன்பிடிப் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவரும் காணாமல் போயுள்ளனர்.

இவ் விபத்தில் மொரட்டுவைப் பகுதியைச் சேர்ந்த 39 மற்றும் 52 வயதுடைய இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாகவும் கடற்படையினரின் உதவியுடன் காணாமல் போனவர்களை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக எகொடஉயன பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4,7)

புன்னை நகரப்பதியுறை

## ஆயாக்கடவையானின் பிரம்மோற்சவப் பெருவிழா

(புண்ணாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவமானது ஆனி மாதம் 16 ஆம் நாள் (30) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து [illegible] திருவிழாக்கள் சிறப்புற இடம்பெறவுள்ள இவ்வாலய பிரம்மோற்சவந்தனில் எதிர்வரும் (09.07.2025) புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஆனிப் பூரணை நன்னாளில் மானஸரோவர் தீர்த்தக்கேணியில் தீர்த்தோற்சவமும் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் பேருந்து சாரதிகளுக்கு ஓய்வூதியம் வழங்கத் திட்டம்

அமைச்சர் பிமல் தெரிவிப்பு

தனியார் பேருந்து ஓட்டுநர்களுக்கு அரச பேருந்து ஓட்டுநர்களைப் போலவே ஓய்வூதியம் வழங்கும் சமூகப் பாதுகாப்பு முறைமையை அறிமுகப்படுத்துவது குறித்து ஆலோசித்து வருகின்றோம் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,


55 வயதை எட்டும் தனியார் பேருந்து ஓட்டுநர்களுக்கு ஓய்வூதிய முறைமையை முன்மொழிந்துள்ளோம். அடுத்த ஆண்டு இந்த முறைமையை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம் என்றார். (ம-4,7)

# புதுச்சேரி பயணம் 07

புருசோத்தமன்

புதுச்சேரிக் கம்பன் விழாவின் முதல் நாள் அமர்வின் காலை நிகழ்வு நிறைவடைந்த பின் அனைவருக்கும் மதிய போசன விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புதுச்சேரி மாநகராட்சி மன்றத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டபத்தில் மதிய போசனம் வழங்கப்பட்டது.



முன்னதாக அந்த மண்டபம் அமைந்த வளாகத்தில் பிரமாண்டமான பதாகைகள் கட்டப்பட்டிருந்தன.

விருந்தோம்பல் நிகழ்விற்கு வருக வருக என அழைக்கின்றோம் என்ற அழைப்பு அந்தப் பதாகைகளில் இடம் பெற்றிருந்தன.

மதிய போசனம் இடம் பெறும் மண்டபத்திற்கு விழாப் பேராளர்கள் வருகை தந்த போது, மண்டப நுழைவாயிலில் வைத்து அவர்களுக்கு வெள்ளைச் சால்வை அணிவித்து ஏற்பாட்டாளர்கள் வரவேற்றனர்.



**கம்பவாரிதியின் உரையைக் கேட்டதனால் இன்று கம்பன் விழாவில் பேசுகின்றேன்**

அங்கும் போத்தல்களில் அடைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற நடைமுறை இருப்பதை அவதானிக்க முடிந்தது.

முதல் நாள் விழாவின் மாலை அமர்வு சரியாக மாலை 6 மணிக்கு ஆரம்பமாகியது.

முனைவர் தெ.ஞானசுந்தரம் தலைமையில் **கம்பன் போற்றும் விவேகம்** என்னும் பொருளில் வைகைச் செல்வன், இரெ.சண்முகவடிவேல், இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் ஆகியோர் உரையாளர்களாகினர்.

தலைமை வகித்த முனைவர் தெ.ஞானசுந்தரம் கம்பராமாயணத்தில் ஆழ்ந்த புலமை உடையவர். தவிர வால்மீகி எழுதிய இராமாயணத்தின் மூலமொழியிலும் அவருக்குப் பரீட்சயம் இருந்த தன் காரணமாக, கம்பராமாயணத்தை ஒப்பிடுகை செய்வதில் அவர் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தார்.

நிகழ்வின் ஒரு நாள் அவருக்கு அருகில் இருந்து இராப்போசனம் உண்ணுகின்ற வாய்ப்புக் கிடைத்தது. யுத்த காலத்திற்கு முன்னர் தெல்லிப்பழைக்கு வந்ததாகவும் துர்க்கா துரந்தரி செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டியின் ஏற்பாட்டில் நடந்த சைவ சித்தாந்த கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பொருட்டே அங்கு வந்ததாகக் கூறிய அவர், பின்னாளில் யாழ்ப்பாணத்திற்கு வரவில்லை என்பதையும் தெரிவித்திருந்தார்.


### இரண்டாம் நாள் நிகழ்வு

மே 10 ஆம் திகதி இரண்டாம் நாள் நிகழ்வு காலை, மாலை அமர்வுகளாக இடம் பெற்றன. காலை அமர்வில் இளையோர் அரங்கம் முதன்மை பெற்றிருந்தது. **கம்பனில் நான் கண்ட இராமன்** என்னும் பொருளில் இடம்பெற்ற இளையோர் அரங்கிற்கு வீ.வீரபாலாஜி தலைமை தாங்கினார்.

24 வயது நிரம்பிய அந்த இளைஞன் கம்பராமாயணத்தில் கொண்டிருந்த விற்பன்னம் கண்டு வியந்தேன்.

தலைமைக்குரிய சிறப்பியல் போடு தான் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தை கனகச்சிதமாகக் கையாண்ட அவரின் ஆற்றல் பாராட்டுதற்குரியது. தமிழ்த் துறையில் தேர்ச்சி பெற்றவராக இருப்பாரோ என்று நினைத்த போது, அவர் வியாபார முகாமைத்துவத் துறை சார்ந்தவர் என்பதும் தற்போது அவர் வியாபார முகாமைத்துவத்தில் கலாநிதிப் பட்டத்தை மேற்கொள்வதாகவும் கூறியதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தேன்.

எங்கள் மண்ணில் 24 வயது நிரம்பிய இளைஞன் இளமாணிப் பட்டத்தை மட்டுமே நிறைவு செய்ய முடியும்.




இங்கு தான் இந்தியத் தேசத்தின் கல்வி உச்சத்தில் இருப்பதை உணர முடியும்.

கம்பனில் நான் கண்ட இராமன் என்னும் விடயப் பொருளில் நடந்த இளையோர் அரங்கத்தில் தலைவனாக-செல்வி த.சுரேகா, தோழனாக-செல்வி வீ.ஹேமவர்த்தினி, பரம்பொருளாக செல்வன் சீ.தீபக் ஆகியோர் உரையாற்றினர். மூவரும் 24 வயதுக்குட்பட்டவர்களாகவே இருந்தனர்.

அதிலும் தீபக் என்னும் இளைஞன் இன்னும் வயதில் குறைந்தவர். சிறந்த பேச்சாற்றல்.

தனது பேச்சை ஆரம்பிக்கும் போது, தனது ஊரில் இராமாயணத்தொடர் சொற்பொழிவு நடைபெற்றது. முதல் நாள் என் அம்மா என் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றார். மறுநாள் நான் என் அம்மாவின் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றேன். அந்தச் சொற்பொழிவைக் கேட்டதன் விளைவாகவே புதுச்சேரிக் கம்பன் விழாவில் பேசுகின்றேன்.

அன்று அந்தத் தொடர் சொற்பொழிவை ஆற்றியவர் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் எனக் கூறிய போது கரகோசம் வானை முட்டியது.

தமிழகத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் எங்கள் கம்பவாரிதியின் உரையால் தமிழ் மீது பற்றுக் கொண்டு கம்பராமாயணத்தைக் கற்கும் ஆர்வத்தை பெற்றான் என்ற செய்தியைக் கேட்ட போது பெருமைப்படாமல் இருக்க முடியுமா என்ன?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு...

மேற்கொள்ள மேல் மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் எஸ்.கே. ஜயசுந்தர முன்னிலையில் நேற்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய இரகசிய வாக்கெடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்றது.

கொழும்பு மாநகர சபை மேயருக்காக தேசிய மக்கள் சக்தி சார்பில் விராய் கெலி பல்தஸாரும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரீஸா சரூக் போட்டியிட்டனர்.

தேசிய மக்கள் சக்தி சார்பில் விராய் கெலி பல்தஸார் 61 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட ரீஸா சரூக் 54 வாக்குகளையும் பெற்றனர்.

இந்நிலையில் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராக ஹேமந்த குமார தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## ஆட்டோ...

- வயது 59) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் (15) இரவு நெடுந்தீவு பிரதான வீதி இலங்கை வங்கிக் கிளை அருகே வேகமாக வந்த முச்சக்கரவண்டி வீதியினைக் கடக்க முற்பட்டவரை மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்தவர் உடனடியாக நெடுந்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடல் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை முச்சக்கரவண்டி சாரதி உடனடியாக நெடுந்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நேற்றுக் (16) காலை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,33)

## இலங்கைத்...

தீவகத் தொகுதிக்குட்பட்ட நெடுந்தீவு, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபைகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைப்பதை மக்கள் விரும்பவில்லை என்பதால் நாம் தனித்து ஆட்சியமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என, மேற்குறித்த மூன்று சபைகளுக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தீவகத்தின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் கட்சியின் தீவகத் தொகுதிக் கிளை உறுப்பினர்களும் தொகுதிக் கிளைத் தலைவர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்துள்ளனர். (ம-7,4)

## வாய்க்காலிலிரு...

என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் சடலம் கிளிநொச்சி பதில் நீதவான் முன்னிலையில் அப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது

இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4,316)

## எரிபொருளைப்...

மீண்டும் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சத்தில் பெருமளவிலான மக்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் வரிசையில் காத்திருந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே நிலவும் போர் பதற்றம் காரணமாக எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என சமூகவலைத்தளங்களில் செய்தி பரவிவந்தது.

இதனையடுத்து நேற்று மதியம் முதல் யாழ்ப்பாணத்தில் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக நீண்ட வரிசையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள ஏராளமான மக்கள் காத்து நின்றனர்.

அத்துடன் சில எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் முடிவடைந்து விட்டதாக அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,4,33,60,104)

## செயற்கைத்...

டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என யாழ்.மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்ட காணொளி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணத்திலே இன்றைய தினம் (நேற்று) எரிபொருளுக்கான செயற்கைத் தட்டுப்பாடு நிலைவரம் உருவாகியிருப்பதை அறிய முடிகிறது.

நேற்று (16) அநுராதபுரத்திலிருந்து 23 கொள்கலன்களிலேயே 6600 லீற்றர் மீதம் ஒரு இலட்சத்து51 ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வரப்பட்டு எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை நாளையும் (இன்று) இதேயளவு எரிபொருள் எடுத்து வரப்பட்டு யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட காங்கேசன்துறை எரிபொருள் சேமிப்பு நிலையத்துக்கும் தொடர்ச்சியாக எரிபொருள் எடுத்து வரப்பட்டு சேமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் யாழ். மாவட்ட மக்கள் இவ்வாறான செயற்கையான எரிபொருள் தட்டுப்பாட்டை உருவாக்க வேண்டாம் என கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

இது தொடர்பாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய அலுவலகம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது என்றார். (ம-7,4)

## யாழ்.மாநகர...

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் யாழ்.மாநகர சபையின் மேயராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி மதிவதனி விவேகானந்தராஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாநகர சபையின் பல்வேறு தேவைகள் தொடர்பில் அவர் ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைத்தார்.

அத்துடன் யாழ்ப்பாண நகர அபிவிருத்தி தொடர்பாக எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றவேண்டும் என ஆளுநர் இதன்போது கேட்டுக் கொண்டார். (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 5862
Z 3 9 7 3 1 9
அத சம்பத
Z 7 3 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 437
National Lotteries Board

தன நிதானய
திகதி -2025.06.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1892
T 20 23 32 67 T
Double Chance 90827

மெகா பவர்
திகதி 16/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2210
N 05 13 48 69 70

ஜய JAYA NLB
திகதி 2025.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 0130
I 0 4 8 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4104
சீட்டிழுப்பு திகதி 16.06.2025
Y 04 12 35 52
Y
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 1171
மேடம் 12 34 46 52 மேடம்
24343 33

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.06.2025 வெற்றி வாரம் 570
D 9 5 0 7 9 6
68426
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,302,527.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2836
சீட்டிழுப்பு திகதி 2025.06.16 தினம் திங்கட்கிழமை
02 30 32 36 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,662,699.20
DLB

சனிதா
திகதி 16.06.2025 வெற்றி வாரம் 4997
49 56 74 79 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,526,201.60
84937
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2025.06.16 வெற்றி வாரம் 2135
22 55 63 67 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,888,684.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4548
சீட்டிழுப்பு திகதி 16.06.2025 தினம் திங்கட்கிழமை
28 38 39 57 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,031,364.80
105157
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 09 36 39 46 74
சுப்பர் இலக்கம்
2012
16.06.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.578,316,268.60
DLB DEVELOPMENT LOTTERIES
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2662
சீட்டிழுப்பு திகதி: 2025.06.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,327,474.40
13 15 33 69 V
290913
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒரு வாக்கு வித்தியாசத்தில்

# வவுனியா மாநகர சபையைக் கைப்பற்றியது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

## முதல்வராக காண்டீபன் தெரிவு



வவுனியா மாநகரசபையை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு வாக்கு வித்தியாசத்தில் கைப்பற்றியதோடு அதன் முதல்வராக சுந்தரலிங்கம் காண்டீபன் தெரிவானார்.

வவுனியா மாநகர சபைக்கான முதல்வர், பிரதி முதல்வர் தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி தலைமையில், வவுனியா மாநகர சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று (16.06) காலை நடைபெற்றது.

இதன்போது முதல்வர் தெரிவு மற்றும் பிரதி முதல்வர் தெரிவுகள் பகிரங்க வாக்களிப்பின் மூலம் நடத்தப்பட்டது. அந்தவகையில் சங்கு கூட்டணியின் சார்பாக போட்டியிட்ட காண்டீபனுக்கு ஆதரவாக 11வாக்குகளும், தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட சிவ சோதி சிவசங்கருக்கு 10 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

இதனடிப்படையில் சங்கு கூட்டணியைச் சேர்ந்த காண்டீபன் புதிய முதல்வராக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்துபிரதி முதல்வருக்கான தெரிவு இடம் பெற்றது. பிரதி முதல்வராக ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட கார்த்தீபனுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், சுயேட்சை குழுவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் பிரேமதாஸ் அவர்களுக்கு 10வாக்குகளும் ஆதரவாக அளிக்கப்பட்டது.

இதனையடுத்து ஜனநாயக தேசியகூட்டணியின் உறுப்பினர் பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி முதல்வராக தெரிவுசெய்யப்பட்டார்.

ஆளும் கட்சி சார்பில் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக தேசிய கூட்டணி என்பன இணைந்து ஆட்சி அமைத்துள்ளன. (ம-4,7,250)

# மருதங்கேணியில் விபத்து குடும்பஸ்தர் காயம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுத் திங்கட்கிழமை மதியம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பஸ்தரை அதிவேகமாக வந்த வாகனம் பின்னால் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட குடும்பஸ்தர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்.

விபத்து ஏற்படுத்தி விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட வாகன சாரதியை மருதங்கேணி பொலிஸார் வாகனத்துடன் கைது செய்துள்ளனர்.

விபத்துக்குறித்து மருதங்கேணி போக்குவரத்து பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-4,7)

## இலங்கை ...

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 59வது அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சமீபத்திய வரிகள் குறித்தே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ள மனித உரிமை ஆணையாளர், வர்த்தகப் போரின் அதிர்ச்சிகள் மூன்றாம் உலக நாடுகளை சுனாமியின் வலுவோடு தாக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கரீபியன் நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் சிறிய தீவு நாடுகள் ஆகியவை மோசமான பாதிப்பை எதிர்கொள்ளும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இலங்கை, பங்களாதேஷ், கம்போடியா, வியட்நாம் போன்ற ஏற்றுமதி தொழிற்துறையை அடிப்படையாகக் கொண்ட நாடுகள் பெரும் பேரழிவுப் பாதிப்புகளை எதிர்கொள்ளும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-4,7)

## குருநகரில் ...

நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 11 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குருநகர் பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7,104)

## ஈரான் ...

ஆங்கில செய்திச் சேவை ஒன்றுக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அளித்த பேட்டியில், தெஹ்ரானில் உள்ள ஈரானின் உளவுத்துறை தலைவர் மற்றும் இரண்டு தளபதிகள் கொல்லப்பட்டதாக அறிவித்தார்.

இதனிடையே, ஈரானின் இஸ்லாமிய புரட்சிக் காவல் படையின் உளவுத்துறை தலைவர் முகமது கசெமி மற்றும் துணைத் தலைவர்கள் ஹாசன் மொஹாகெக் மற்றும் மொஹ்சென் பகேரி ஆகியோர் கொல்லப்பட்டதாக ஈரான் ஊடகம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் தற்போது இஸ்ரேலின் இரண்டு மொசாட் உளவாளிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

அண்மைய நாட்களாக ஈரான் (Iran) - இஸ்ரேல் (Israel) மோதல் என்பது அதி உச்சத்தை அடைந்துள்ளது.

அணு ஆயுதத்தை தயாரிப்பதில் ஈரான் தீவிரமாக செயற்பட்ட நிலையில், அது தங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் மேற்கொண்டது.

இரு நாடுகளுக்குமிடையில் போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் இஸ்ரேலின் மொசாட் அமைப்பின் இரண்டு நபர்களை ஈரான் கைது செய்துள்ளதாக இஸ்ரேலின் செய்திகளை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளது.

அல்போர்ஸ் மாகாணத்தில் வெடிபொருட்கள் மற்றும் மின்னணு சாதனங்களைத் தயாரித்துக் கொண்டிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரானின் அரச ஊடகம் ஒன்றும் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-4,7)

பல ஆயிரம் கடந்த பதிவுகள்...
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள் கல்யாணி மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்
தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

சிறுநீரகம் தேவை
O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
(1237)
074 076 8566

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3212)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வேலைவாய்ப்பு
உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர்மார்க்கட் ஒன்றிற்கு பெண் பணியாளர்கள் வேலைக்குத் தேவை.
(1238)
வயதெல்லை : 20 - 30 வரை
நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்
076 422 1761

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org